| | **பத்திரிக்கை வெளியீடு**<br>*Reserve Bank of India* |
|---|---|
| தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001 | |
| DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001<br>போன் Phone: 91 22 2266 0502 | இந்திய ரிசர்வ் வங்கி<br>வெப்சைட் Website: www.rbi.org.in<br>இ மெயில் Email: helpdoc@rbi.org.in |


ஏப்ரல் 03, 2020

**சந்தை நேரங்களில் மாற்றங்களை ஆர்பிஐ அறிவிக்கிறது**

தீவிர கோவிட்-19 தொற்றுநோய் பரவல் ஏற்படுத்தியுள்ள எதிர்பாராத சூழ்நிலையால் பொதுமுடக்கங்கள், சமூக விலகல், மக்கள் நடமாட்டம் மற்றும் அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளில் கட்டுப்பாடு, வீட்டிலிருந்தே வேலை மற்றும் வர்த்தக தொடர்ச்சி திட்டப்பணிகள் போன்ற ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவான இடப்பெயர்வுகள், நிதிச் சந்தைகளின் செயல்பாட்டை மோசமாக பாதித்துள்ளன. செயலாக்க மற்றும் தளவாட அபாயங்கள் ஏற்படுவதால், பணியாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. செயலாக்க நலிவு சந்தையில் பணப்புழக்கத்தை பாதிப்பதுடன் நிதி விலைகளின் நிலையற்றத் தன்மையையும் அதிகரிக்கும்.

இந்த அபாயங்களைக் குறைப்பதற்கும், சந்தை பங்கேற்பாளர்கள் போதுமான சரிபார்ப்புகள் மற்றும் மேற்பார்வைக் கட்டுப்பாடுகளைப் பராமரிப்பதுடன் நலிவடைந்த வளங்களை மேம்படுத்துவதற்காகவும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், பல்வேறு சந்தைகளுக்கான வர்த்தக நேரங்களை கீழுள்ளபடி திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது:

| சந்தை | தற்போதைய நேரம் | மாற்றியமைக்கப்பட்ட நேரம் |
|---|---|---|
| அழைப்பு / அறிவிப்பு / கால பணம் | 9 AM முதல் 5 PM | 10 AM முதல் 2 PM வரை |
| அரசாங்க பத்திரங்களில் சந்தை ரெப்போ | 9 AM முதல் 2:30 PM | 10 AM முதல் 2 PM வரை |
| அரசாங்க பத்திரங்களில் முத்தரப்பு ரெப்போ | 9 AM முதல் 3 PM | 10 AM முதல் 2 PM வரை |

| | | |
|---|---|---|
| கமர்ஷியல் பேப்பர்ஸ் மற்றும் வைப்புச் சான்றிதழ்கள் | 9 AM முதல் 5 PM | 10 AM முதல் 2 PM வரை |
| கார்ப்பரேட் பத்திரங்களில் ரெப்போ | 9 AM முதல் 6 PM | 10 AM முதல் 2 PM வரை |
| அரசு பத்திரங்கள் (மத்திய அரசு பத்திரங்கள், மாநில மேம்பாட்டு கடன்கள் மற்றும் கருவூல பில்கள்) | 9 AM முதல் 5 PM | 10 AM முதல் 2 PM வரை |
| வெளிநாட்டு நாணயம் (எஃப்சிஒய்) / அந்நிய செலாவணி டெரிவேட்டிவ் உட்பட இந்திய ரூபாய் (ஐஎன்ஆர்) வர்த்தகங்கள் * | 9 AM முதல் 5 PM | 10 AM முதல் 2 PM வரை |
| ரூபாய் வட்டி வீத டெரிவேட்டிவ்கள் * | 9 AM முதல் 5 PM | 10 AM முதல் 2 PM வரை |

*: அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படுவதைத் தவிர மற்றவை

இந்த ஏற்பாடுகள் ஏப்ரல் 7, 2020 (செவ்வாய்) முதல் நடைமுறைக்கு வந்து ஏப்ரல் 17, 2020 (வெள்ளிக்கிழமை) வரை தொடரும் [இரண்டு நாட்களும் உள்ளடக்கியது].

ஆர்டிஜிஎஸ், நெஃப்ட், இ-குபேர் மற்றும் பிற சில்லறை கட்டண அமைப்புகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களுக்கான அனைத்து வழக்கமான வங்கி சேவைகளும் தற்போதுள்ள நேரங்களின்படி தொடரும்.

**யோகேஷ் தயால்**
தைலைம பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2019-2020/2175**